# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## SESSIONS CASE NO. 107 /2014

## Deposition of Witness for : PW 5

**Name** : திரு. வீராசாமி
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 22-07-2022.**

**முதல் விசாரணை -**

நான் தற்போது கீழ்சிறுப்பாக்கம் கிராமத்தில் வசிக்கிறேன். எதிரிகளை தெரியும். அ.சா.1 பாலுவை தெரியும். அ.சா.1ன் குடும்பத்திற்கும், எதிரியின் குடும்பத்திற்கும் உள்ள முன் விரோதத்தைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றும், விசாரணையில் கடந்த 25.4.2013ந் தேதி மாலை சுமார் 6.45 மணியளவில் இறந்து போன பாபு, பாலு குடும்பத்திற்கும், அண்ணாமலை குடும்பத்திற்கும் 3 செண்ட் சம்மந்தமாக கோர்டில் வழக்கு போட்டு அதற்கு அ.சா.1ன் வீட்டிற்கு தீர்ப்பாகியுள்ளது என்றும், அந்த இடம் குறித்து அடிக்கடி தகராறு ஏற்பட்டு கோர்டில் அப்பீல் செய்து மீண்டும் அ.சா.1க்கு தீர்ப்பாகிவிட்டதாக பேசிக்கொண்டார்கள் என்றும், ஒரு வாரத்திற்கு முன்பாக 1ம் எதிரி அ.சா.1ன் வீட்டிற்கு சென்று மிரட்டி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று தகராறு செய்தார் என்றும், அது சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்தும் பேசப்பட்டது என்றும், பிறகு 25.4.2013ந் தேதி மாலை 6.45 மணிக்கு நான் என் நிலத்தில் இருந்து என் வீட்டிற்கு வந்தபோது ஒரே கூச்சலாகவும், கும்பலாகவும் இருந்தது என்றும், நான் போய் பார்த்த போது எங்கள் வீட்டு சிமெண்ட் தின்னையில் அ.சா.1ன் மகன் பாபு கழுத்திலும், கன்னத்திலும், நெற்றியிலும் கத்தியால் குத்தப்பட்டு ரத்தம் சொட்ட சொட்ட தின்னையில் கிடந்தார் என்றும், நான் என்ன என்று விசாரித்த போது அங்கிருந்த கங்கைஅமரன், வேலு, சௌந்தர், குமார் ஆகியோர் அண்ணாமலையின் மகன் சுந்தரமூர்த்தி தன் கையில் வைத்திருந்த கூர்மையான இரும்பு கத்தியால் பாபுவை மாறி மாறி குத்திவிட்டதாக சொன்னார்கள். பின்னர் பாபுவை டாடா ஏஸியில் ஏற்றி திருவண்ணாமலை அரசு

மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு எடுத்து சென்றார்கள் என்றும், பின்னா் பாபு இறந்து விட்டதாக கூறினார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது ஆஜா் எதிரிகள் எங்கள் ஊரைச் சோ்ந்தவா்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

ஒம்/- வீராசாமி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.